# மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத்

# தொகுதி முகாமை சபை

(1987 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க சட்டத்தினால் கூட்டிணைப்புச் செய்யப்பட்டது)

## பதவி வெற்றிடம்

## பிரதம நிறைவேற்று அதிகாரி பதவி (மார்ஷல்) – (HM 1-3)

முகாமை சபையின் குறிக்கோள் மீயுயர் நீதிமன்றங்களையும் மற்றும் அவற்றின் கட்டடங்களையும் கட்டுப்படுத்தல், நிருவகித்தல் மற்றும் முகாமை செய்தல் என்பதோடு கட்டடத் தொகுதியின் வசதிகளை மேம்படுத்துவதற்கு அத்தகைய சேர்த்தல்கள், திருத்தங்கள் மற்றும் மேம்படுத்தல்கள் பணிகளைச் செய்தல் ஆகும். பிரதம நிறைவேற்று அதிகாரி முகாமை சபையின் குறிக்கோள்களை அடைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு சபையின் அதிகாரங்களையும் பிரயோகிப்பார் என்பதோடு மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதியின் ஊழியர்களின் சகல அலுவல்களையும் நிர்வகிப்பார்.

மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபையில் பிரதம நிறைவேற்று அதிகாரி (மார்ஷல்) பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்ட இலங்கையரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**<u>தகைமைகள்</u>**

(கீழே 01 அல்லது 02)

1. வணிக நிர்வாகம் / வணிக முகாமை/ பொது நிர்வாகம்/ பொது முகாமை / மனித வளங்கள் முகாமை துறையில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பட்டம்.

   அத்தோடு

   வணிக நிர்வாகம் / வணிக முகாமை/ பொது நிர்வாகம்/ பொது முகாமை / மனித வளங்கள் முகாமை துறையில் முதுகலைப் பட்டம் அல்லது பொருத்தமான விடயத்திற்கு ஏற்புடைய ஒரு அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனம் ஒன்றிலிருந்து ஓர் இணை அங்கத்துவம்.

   மற்றும்

   அரசாங்க கூட்டுத்தாபனம், நியதிச் சட்டசபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ மட்டத்தில் உள்ள பதவிகளில் குறைந்த பட்சம் 15 வருடங்கள் அனுபவம்.

2. பதவியுடன் தொடர்புடைய விடயத் துறையில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழிற்றுறை பட்டய நிறுனத்தின் முழுமையான அங்கத்துவம்.

   அத்தோடு

   அரசாங்க கூட்டுத்தாபனம், நியதிச் சட்டசபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ மட்டத்தில் உள்ள பதவிகளில் குறைந்த பட்சம் 15 வருடங்கள் அனுபவம்.

   **குறிப்பு**

   கட்டமைப்பு நேர்முகத் தேர்வில் புள்ளிகள் வழங்கப்படும் போது ஆயுதப் படையில் கட்டளை அதிகாரி ஒருவராக இருத்தல் (ஆயுதப் படையில் பிரிகேடியர் தரம் அல்லது

அதற்கு சமமான தரத்திற்கு குறையாத பதவி) அல்லது ஒரு சட்டத்தரணியாக இருத்தல் மேலதிக தகைமையாக அல்லது துறைசார் தகைமையாகக் கருதப்படும்.

வயது: 35 வயதுக்கு குறையாமலும் மற்றும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**: HM 1-3-2016 (ரூ.86,865/- 15x2,270 –- ரூ.120,915/-)

(அரசாங்கத்தின் வரிக் கொள்கைக்கு உட்பட்டது)

பொது நிபந்தனைகள்

(அ) ஒவ்வொரு விண்ணப்பதாரியும்

I. இலங்கை பிரசையாக இருக்க வேண்டும்.

II. பதவிக்கான கடமைகளைப் புரிவதற்கான உடல் ரீதியான மற்றும் உள ரீதியான தகைமையைக் கொண்டிருக்க வேண்டும்.

III. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) இந்தப் பதவி நிரந்தரமானதாகும் என்பதோடு ஓய்வூதியத்துக்கு உரித்தற்றதாகும். இடமாற்றல் இல்லை.

(இ) சகல விண்ணப்பதாரிகளும் ஒரு எழுத்து மூல/ நடைமுறை சோதனைக்கு உட்படுத்தப்படலாம் மற்றும்/ அல்லது ஒரு கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும்படி வேண்டப்படலாம்.

(ஈ) **ஊழியர் சேமலாப நிதியம்**: ஊழியர் சேமலாப நிதியத்துக்கு ஊழியரின் அடிப்படைச் சம்பளத்தின் 10% சதவீதம் பங்களிப்புச் செலுத்துகின்ற அதேநேரம் தொழில் தருனரினால் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு 12% சதவீதமும் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு 3% சதவீதமும் பங்களிப்புச் செய்யப்படும்.

(உ) தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரி உத்தியோகபூர்வ வாகனம் ஒன்றிற்கு உரித்துடையவராவார் என்பதோடு எரிபொருள் அங்கீகரிக்கப்பட்ட வரையறைக்கு உட்பட்டது (அரசாங்கத்தின் வரிக் கொள்கைக்கு உட்பட்டது). தொலைபேசி மற்றும் மருத்துவ/விபத்துக் காப்புறுதி திட்டம் மற்றும் ஏனைய உபரிச் சலுகைகள் சபையின் அங்கீகாரத்திற்கு ஏற்ப வழங்கப்படும்.

வயது, தகைமைகள், பயிற்சி, அனுபவம், முன்னர் வகித்த பதவிகள் மற்றும் ஆட்சேர்ப்பு மற்றும் முந்தைய வேலையில் இருந்து ராஜினாமா செய்த திகதிகள் உட்பட முழு சுய விபரத்தையும் மற்றும் சான்றிதழ்கள் மற்றும் பெயர்கள், முகவரிகள் மற்றும் உறவினர் அல்லாத இரு நடுவர்களின் தொடர்பு இலக்கங்களுடன் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் தயவு செய்து விண்ணப்பிக்கவும்.

அரச துறையில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர் மூலமாக அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை இணைக்கும் கடித உறையின் மேல் இடது மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்பட வேண்டும். விண்ணப்பங்கள் **31.03.2023** அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

மார்ஷல்,
மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபை
த.பெ.இல:223,
கொழும்பு 12